## தமிழ் நாடு சட்டப் பேரவை

---

### வியாழக்கிழமை, 1973 நவம்பர் 29

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

#### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

#### சித்தக்காட்டனூருக்கு புதிய ஆரம்பப்பள்ளி

***479. வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், முத்தரெங்கம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சீத்தக்காட்டனூரில் புதிய ஆரம்பப்பள்ளி திறக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அத்திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.
(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்த ஊரில் ஒரு ஆரம்பப்பள்ளி துவக்கவேண்டுமென்று பொது மக்களிடமிருந்து ஏதாவது மனு வந்துள்ளதா? அதுகுறித்து எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, முத்துரெங்கம்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த சீத்தக் காட்டானூரில் புதிய ஆரம்பப்பள்ளி 1973-74-ம் ஆண்டில் திறப்பதற்கான பிரேரணை இன்னும் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி

ஒன்றிய ஆணையரிடமிருந்து கல்வித் துறையினரால் பெறப் படவில்லை. 1972-73-ம் ஆண்டில் பெறப்பட்ட பிரேரணை பரிசீலிக் கப்பட்டு 1972-73-ம் கல்வியாண்டில் பெரும்பகுதி நாட்கள் கடந்துவிட்டபடியால் 1973-74-ல் மீண்டும் புதுப்பித்துக்கொள்ளு மாறு ஆணையருக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், ஆணை யரிடத்திலிருந்து எந்தவித பதிலும் வரவில்லை. கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தை அடுத்த கடவூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் கடவூர் ஒன்றியத்திலுள்ள ப. சுக்காம்பட்டி பள்ளிக்கும்—சீதக்காட்டனூருக்கும் இடையில் சுமார் ஒரு மைல் தூரம் இருக்குமென்றும், சீத்தக்காட்டானூரில் பள்ளி துவக்கப்பட்டால், ப. சுக்காம்பட்டி பள்ளி பாதிக்கப்படும் என ஆட்சேபணையைத் தெரிவித்துள்ளார். 1973-74-ம் ஆண்டுக்கு மேற்படி சீத்தக்காட்டா னூரில் பள்ளி திறப்பதற்கான பிரேரணைகள் ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமிருந்து கிடைக்கப்பெற்றவுடன் கடவூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் ஆட்சேபணை பரிசீலிக்கப்பட்டு தகுந்த ஆணை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புலவர் பழனிச்சாமி.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, தங்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்தப் பேரவையில் 'பழனிச்சாமி' என்ற பெயரில் நான்கைந்து பேர் இருக்கிறோம். ஆகவே, முன் எழுத்தையும் சேர்த்து அருள்கூர்ந்து சொன்னால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'புலவர் பழனிச்சாமி' என்றுதான் சொன்னேன்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, தனியார்ப் பள்ளி நிர்வாகிகள் ஆசிரியர்களுக்குப் பல வகைகளில் தொந்தரவு கொடுத்து வருகிறார்கள். ஆகவே, இனிமேல் புதிதாகத் தொடங்குகிற பள்ளிகளை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகவும், நம்முடைய அரசின் மூலமாகவும் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே. இதுபற்றி கோரிக்கைகளை சில பேர் வைத்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.